Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 343

வெள்ளிக்கிழமை
04 நவம்பர் 2022

ஐப்பசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## ஹெரோயினுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 4
யாழ்ப்பாணம் - மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உயிர் கொல்லிப் போதைப் பொருளானஹெரோய்னுடன் கைது செய்யப் பட்டுள்ளனர். 12

சதொசவில்

## கோதுமை மா இனி 279 ரூபா

கொழும்பு, நவ. 4
சீனி, கோதுமை மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் சில வற்றின் விலைகள் நேற்றுமுதல் குறைக் கப்பட்டுள்ளன என்று சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. 12

## மீற்றர் வட்டியால் பறிபோனது உயிர்!

யாழ்ப்பாணம், நவ. 4
மீற்றர் வட்டிக்குப் பெற்ற கடனை திரும்பச் செலுத்த முடியாததால் வியாபாரியொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். சிவப் பிரகாசம் சிவரூபன் (வயது-37) என்ற வியாபாரியொருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கடை நடத்தி வந்த வியாபாரியே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான 12

இறுதிப்போரின் போது

# புலிகள் எவரும் படையினரிடம் சரணடையவே இல்லை!

## தகவலறியும் ஆணைக்குழுவில் இராணுவத்தினர் அழிச்சாட்டியம்

கொழும்பு, நவம்பர் 4
இறுதிப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இலங்கை இராணுவத்திடம் தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும் சரணடையவில்லை என இலங்கை இராணுவம் தகவலறியும் ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியம் வழங்கியது. 11



## தமிழர்களுக்கான தீர்வைக் கோரமுன் தமிழ் அரசியல்வாதிகளே ஒன்றுபடுக!

அமைச்சர் நிமால் வலியுறுத்து

கொழும்பு, நவ. 4
தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தயாராகவுள்ளது. அதற்கு முன்னர் பிளவு 11

## காணாமலாக்கப்பட்டோர் எவரும் உயிரோடு இல்லை

நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 4
காணாமலாக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் 11

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்

## இம்ரான்கான் மீது துப்பாக்கிச் சூடு!

காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்ப்பு



இஸ்லாமபாத், நவ. 4
பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாகிஸ் 12

## இலங்கை மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

நிதி சேகரிப்புத் தளத்தை ஆரம்பித்தது ஐ.நா.

கொழும்பு, நவ. 4
இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிக மோசமாகப் 11

இந்த வாரத்தில்

## எரிபொருள் விலையில் திருத்தங்கள் இல்லை!

எரிசக்தி அமைச்சர் கைவிரிப்பு

கொழும்பு, நவ. 4
எரிபொருள் விலையில் இந்த வாரம் திருத்தம் மேற்கொள்ளப்படாது என மின்சக்தி மற்றும் 11

யாழ்ப்பாணத்தில்

## டெங்குத் தொற்றால் பெண்ணொருவர் பலி!

விரிவு - பக். 11

வருடாவருடம்

## உள்ளக வளி மாசு: 4,000,000 பேர் பலி!

கொழும்பு, நவ. 4
உள்ளக வளி மாசடைவால் உலகம் முழுவதும் வருடாந்தம் 40 லட்சத்துக்கும் அதிகமானோர் 12

## சங்கானைப் பகுதியில் பணம், நகை திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 4
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில், வீட்டில் உரிமையாளர் இருக்கத் 12

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சீனாவுக்கு இலங்கை கள்ள உதவி கடும் அதிருப்தியில் புதுடில்லி!

**கொழும்பு, நவ.4**

**இலங்கையின் எரிபொருள் தாங்கிக் கப்பல்கள் சீனக் கடற்படையின் கப்பல்களுக்கு இரகசியமாக ஆழ் கடலில் எரிபொருள் நிரப்புவது தொடர்பில் இலங்கையிடம் இந்தியா கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளது.**

கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புவது தொடர்பில், வெளிப்படையான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை கொண்டு வர வேண்டும் என்று இலங்கையை புதுடில்லி வலியுறுத்தியுள்ளது.

சீன இராணுவக் கப்பல்களை அம்பாந்தோட்டை அல்லது கொழும்பு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கவோ அல்லது எரிபொருள் நிரப்பவோ அனுமதிக்கக்கூடாது என்று இந்தியா கேட்டுள்ளது என்று இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இருந்து இலங்கைக் கப்பல்கள் எரிபொருளை ஏற்றி வருவதும், சீனப் போர்க் கப்பல்களுக்கு ஆழ்கடலில் எரிபொருள் நிரப்புவதும் இந்தியா மற்றும் அமெரிக்காவை கவலையடையச் செய்துள்ளது என்று இந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியின் மோசமான நாள்களில் இலங்கைக்கு எரிபொருள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதில் இந்தியா முன்னிலையில் செயற்படுகிறது. ஆயினும் சீனப் பிரச்சினையில் புதுடில்லியின் உணர்வுகள் என்று வரும்போது கொழும்பு அதன் வாக்குறுதியை நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை.

வளைகுடா கடற்பகுதியில் கடற்கொள்ளையர்களின் நடமாட்டம் குறைவாக இருந்தாலும் சீனப் போர்க்கப்பல்கள் கடற்கொள்ளையர்களுக்கு எதிரான சாக்குப்போக்கைப் பயன்படுத்தி கிழக்கு ஆபிரிக்கா மற்றும் ஏடன் கடற்பகுதியை பயன்படுத்தி வருகின்றன.

இந்தக் கப்பல்களுக்கு இலங்கையினால் எரிபொருள் நிரப்பப்படுவது இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாக உருவாகி வருகிறது. இந்தியாவின் ஆட்சேபனைகளை மீறிச் சீன உளவுக் கப்பலான யுவான் வாங் 5 ஐ அம்பாந்தோட்டையில் நிறுத்த அனுமதித்து பீஜிங்கின் மிரட்டலுக்கு இலங்கை அரசாங்கம் முன்னதாக பணிந்தது.

அப்போது, சீன கடற்படைக் கப்பல்களுக்கு எந்தத் தளபாட ஆதரவையும் வழங்குவதைத் தவிர்க்கவேண்டும் என்று இந்தியாவும், அமெரிக்காவும் கொழும்பு அரச தலைமைக்குத் தெளிவுபடுத்தியிருந்தன.

யுவான் வாங் 5 போன்ற சீனாவின் ஆராய்ச்சிக் கப்பல்கள் நீர்நிலை ஆய்வுகள் மற்றும் உலோக ஆய்வுகளை மேற்கொள்வதாகக் கூறப்பட்டாலும், அவை உண்மையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவை மையமாகக் கொண்டு அந்தப் பகுதியில் செயற்கைக்கோள் செயற்பாடு மற்றும் ஏவுகணை சோதனை ஆகியவற்றைக் கண்காணித்து வருகின்றன. இது தீவிர கவலைக்குரிய பிரச்சினை என்று இந்திய தரப்பு தெரிவித்துள்ளது. (எ)

*வடக்கில் இதுவரை*

## 16 படையினரின் சடலங்கள் மீட்பு!



யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டில் இதுவரை இராணுவம், கடற்படை, விமானப்படையைச் சேர்ந்த 16 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 13 சடலங்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளன.

16 சடலங்களில் 11 பேர் தற்கொலை செய்துள்ளனர் என்றும் 2 பேர் சக சிப்பாய்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 3 பேர் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,22)

## தபால் பொதியில் போதைமாத்திரை

கொழும்பு, நவ. 4

தபால் பொதியொன்றில் போதைமாத்திரைகள் மீட்கப்பட்டன என்று சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் தபால் மதிப்பீட்டுப் பிரிவில்;

ஜேர்மனியிலிருந்து அங்கொட பகுதியிலுள்ள முகவரிக்கு அனுப்பப்பட்ட தபால் பொதி ஒன்று விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன்போது 2 ஆயிரத்து 387 கிராம் எடையுடைய 4 ஆயிரத்து 956 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் சந்தைப் பெறுமதி 49.56 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது என்று சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக போதை மாத்திரைகள் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. (ஒ-14,இ)

*அமெ. அன்பளிப்புச் செய்த*

## ஆழ்கடல் ஊடுருவு கப்பல் நாட்டை வந்தடைந்தது

கொழும்பு, நவ. 4

அமெரிக்காவால் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பி-627 ஆழ்கடல் ஊடுருவல் கப்பல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ளது.

அமெரிக்காவின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

சுமார் 14 ஆயிரம் எம்.என். தாங்குதிறன் கொண்ட குறித்த கப்பல், அதிகபட்சமாக 29 விநாடிகள் வேகத்தில் ஊடுருவும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 187 பேர் உள்ளடங்கக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, அதிநவீன ஆயுதங்கள் இயந்திரங்களுடன் பொருத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

*10 ஆயிரம் டொலர் பெறுமதியான*

## புற்றுநோய் மருந்துகள் துறைமுகத்தில் முடக்கம்

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் குழுவொன்று புற்று நோயாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் அனுப்பிய பெருந்தொகை மருந்துப் பொருள்கள் கொழும்பு துறைமுகத்தில் ஒரு மாதத்துக்கும் மேலாக முடங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் மருந்துவ விநியோகப் பிரிவு இதுவரை உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

நாட்டில் நிலவும் மருந்துப் பற்றாக்குறையால் நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய 'மஹரகம அபேக்ஷா' மருத்துவமனை மருத்துவர்கள் குழுவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இந்த மருந்துப் பொருள்களை அவுஸ்திரேலியாவிலுள்ள இலங்கையர் குழுவொன்று அனுப்பி வைத்துள்ளது. இவ்வாறு முடங்கியுள்ள மருந்துகளில் புற்று நோயாளர்களுக்கான சுமார் பத்தாயிரம் டொலர் பெறுமதியான இருபது வகையான அத்தியாவசிய மருந்துகள் காணப்படுகின்றன.

எனவே, நன்கொடையாக வழங்கப்பட்ட குறித்த மருந்துகளை விடுவிக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறித்த மருத்துவமனை வட்டாரம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-இ)

## களனி பல்கலையில் பகிடிவதை: மாணவர்களிடையே விசாரணை

கொழும்பு, நவ. 4

களனி பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர் ஒருவரை பகிடிவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டில் சிரேஷ்ட மாணவர்கள் மூவரை கிரிபத்கொட பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

பாதிப்படைந்த மாணவன் கிரிபத்கொட பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கமைய குறித்த மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

சிரேஷ்ட மாணவர்கள் தன்மீது பகிடிவதையில் ஈடுபட்டனர் எனவும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் பாதிக்கப்பட்ட மாணவன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொட பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## அரச செலவினத்தை விடவும் கடன் அதிகம்

கொழும்பு, நவ.4

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் பெறப்பட்ட கடன் தொகையானது முழு ஆண்டின் அரச செலவினத்தை விடவும் அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரல தலைமையிலான குழு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது என்று பேராதனை மற்றும் ருகுணு பல்கலைக் கழகத்தின் பொருளாதாரத்துறை விரிவுரையாளர் கலாநிதி நந்த சிறி கெம்பியஹெட்டி தெரிவித்தார்.

இந்த ஆய்வின்படி ஜனவரி மாதத் தொடக்கத்தில் அரசின் மொத்தக் கடன் 17 இலட்சத்து 18 ஆயிரத்து 900 கோடி ரூபாவாக இருந்துள்ளது. இந்த வருடம் ஏப்ரல் மாத இறுதிக்குள் இந்தத் தொகை 23 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் அரசாங்கத்தின் நிகர கடன் அதிகரிப்பு 57 லட்சத்து 2 ஆயிரம் கோடி ரூபாவாகும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் மழையால் நெற்பயிர்கள் அழிவு



சாவகச்சேரி, நவ. 4

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் பல ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை வெள்ளத்தால் அழிவடைந்துள்ளது என நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தென்மராட்சி தெற்கு பிரதேசத்தின் அறுகுவெளி, தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டி போன்ற இடங்களில் பல ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வருடம் போதியளவு உரவகைகளும் கிடைக்கப்பெற்றன. ஆயினும் இயற்கையின் சீற்றத்தால் எமது பயிர்கள் அழிவடைந்துள்ளன.

சாவகச்சேரியிலிருந்து தனங்களப்புக்குச் செல்லும் வீதியின் இரண்டாவது கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வெள்ளநீர் வழிந்தோடும் மதகு வீதி புனரமைப்பின்போது மூடப்பட்டமையாலேயே மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம்செலுத்தி எமக்கு இழப்பீடு பெற்றுத்தர வழிவகை செய்ய வேண்டும் - என்றனர். (ச-9)



## மழையால் இடம்பெயர்ந்தோருக்கு சுகாதார வசதிகள் வழங்கப்படும்

### வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதி

யாழ்ப்பாணம், நவ. 4

கடந்த சில நாள்களாகப் பெய்த கன மழை காரணமாக இடம்பெயர்ந்து காக்கைதீவு கடற்றொழிலாளர் மண்டபத்தில் தங்கியுள்ள மக்களுக்குத் தேவையான சுகாதாரவசதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திலிப் லியனகே உறுதியளித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட 12 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து காக்கைதீவு மீனவ சமூக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டார். இதன்போது மண்டபத்திலுள்ள நிலையை ஆய்வு செய்ததோடு மண்டபத்திலுள்ளோருக்கான சுகாதார வசதிகளை வழங்க ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ஒ-14,214)

## 160 வகை மருந்துகளுக்கு தற்போதும் தட்டுப்பாடு

நாட்டில் தற்போது சுமார் 160 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நோயாளிகளின் சிகிச்சைக்காக ஆயிரத்து 300க்கும் மேற்பட்ட வகையான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் 383 வகையான மருந்துகள் அத்தியாவசிய மருந்துகளாகக் கருதப்படுகின்றன. இதில் தற்போது 160 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்துடன் சில மருத்துவமனைகளில் பரசிட்டமோல் மருந்துக்குக் கூட கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது - என்றார். (ஒ-14,இ)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 4

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் சிவபாதசுந்தரம் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் பொ.அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவ கலாநிதி திருமதி இரஞ்சினி லபோசன், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை. செல்வராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## துப்பாக்கி, வாளுடன் ஒருவர் கைதானார்

கிளிநொச்சி, நவ. 4

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகாவில் பகுதியில் இடியன் துப்பாக்கி மற்றும் வாள் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட போதே குறித்த துப்பாக்கி மற்றும் வாள் ஆகியவை மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)



## பாணுடன் கரிக்கட்டி

யாழ்ப்பாணம், நவ. 4

வெதுப்பக உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் கடையொன்றில் பாணுடன் கரிக்கட்டி காணப்பட்டுள்ளது.

மருதனார்மடத்தில் உள்ள கடையொன்றில் நேற்றுமுன்தினம் காலை வேளை, நபரொருவர் பாண் வாங்கி வீட்டுக்குக் கொண்டுசென்றுள்ளார். அதன்பின்னர் பாணை வெட்ட முற்பட்ட வேளை, பாணின் வெளிப்புறத்தில் கரிக்கட்டி இருந்தது தெரியவந்தது.

இதேவேளை அச்சுவேலிப் பகுதியில் உள்ள வெதுப்பக நிலையத்தில் அண்மையில் வாங்கிய பாணில் குண்டூசிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-14,27)

## கொல்லங்கிராய் மயானத்துக்கு கொட்டகை அமைக்கத் தீர்மானம்

சாவகச்சேரி, நவ. 4

நுணாவில் பகுதியில் அமைந்துள்ள கொல்லங்கிராய் மயானத்தில் எரிகொட்டகை அமைக்க சாவகச்சேரி நகரசபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் கருத்துரைத்த சபையின் உறுப்பினர் ந.திருக்குமரன் தெரிவிக்கையில்; நுணாவில் பகுதியில் அமைந்துள்ள மயானம் நீண்டகாலமாக எரிகொட்டகை இல்லாத நிலையில் மழைக்காலங்களில் கொண்டு செல்லப்படும் சடலத்தை தகனம் செய்வதற்கு மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால் இந்த வருட பாதீட்டில் வட்டாரத்தில் மேற்கொள்ளவிருந்த வீதி அபிவிருத்திப் பணியை நிறுத்தி அதற்கு ஒதுக்கிய நிதியில் எரிகொட்டகை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மயானத்துக்கு எரிகொட்டகை அவசியம் என்பதால் வீதி புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் எரிகொட்டகை அமைக்க சபையில் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் சபைக்கு வேறு நிதி கிடைக்கும் பட்சத்தில் வீதிப் புனரமைப்பு இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,9)

## கௌரவிப்பு

சாவகச்சேரி, நவ. 4

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தால் கடந்த வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, மாவட்டத்தில் உள்ள ஐக்கிய நாணய சங்கங்கள் மற்றும் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களிலுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த,சங்கத்தில் அங்கத்துவம் உள்ள குடும்பங்களின் பிள்ளைகள், தமது சங்கத்தின் சிபாரிசுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்துக்கு விண்ணப்பிக்குமாறு அறிவித்துள்ளனர். (ஒ-14,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இருவார காலத்துக்குள்

# உயிர்கொல்லி போதைக்கு எதிராக சட்ட வரைவு சமர்ப்பிக்க வேண்டும்

## அத்துரலிய ரத்னதேரர் வலியுறுத்து

**கொழும்பு, நவ. 4**

**உயிர்கொல்லிப் போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான சட்ட வரைவை இருவார காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம் என நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.**

கம்யூனிசக் கட்சி காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாத் தொற்றுப் பரவலைக் காட்டிலும் உயிர்கொல்லிப் போதைப்பொருள் பாவனை சமூகத்தில் இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் தீவிரமடைந்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ, மாளிகாவத்தை, கொட்டாஞ்சேனை, கிருலப்பனை ஆகிய பகுதிகளில் போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் வெளிப்படைத் தன்மையாகவே முன்னெடுக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் 15 வயதுக்குட்பட்ட 50 சதவீதமான மாணவர்கள் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகியுள்ளனர். இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானதே.

வறுமையின் காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி விட்டு கொழும்பு உட்பட நகர்ப்பகுதிகளுக்கு தொழில்வாய்ப்புத் தேடி வரும் இளைஞர், யுவதிகள் பாதாள மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளின் பிடிக்குள் சிக்குண்டு தமது எதிர்காலத்தை அழித்துக்கொள்கிறார்கள்.

தற்போது பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கடுமையான சட்டத்தை இயற்றும் வகையில் இரண்டு வார காலத்துக்குள் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம்.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தைக் காட்டிலும் போதைப்பொருளுக்கு எதிரான சட்டத்தை இயற்ற அவதானம் செலுத்த வேண்டும்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவில் அபின் போதைப்பொருள்பாவனைக்கு எதிராகதேசிய மட்டத்தில் எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை ஓர் எடுத்துக்காட்டாகக் கருதி நாமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ஒ-14-இ)

# கிளி.பொருளாதார நிலையத்துக்கு அமைச்சர்கள் குழு களப்பயணம்

**கிளிநொச்சி, நவ. 4**

கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர்கள் குழுவொன்று நேற்று வியாழக்கிழமை களப்பயணம் மேற்கொண்டுள்ளது.



இதன்போது கனகபுரம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டு வர்த்தகர்களுடன் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் வர்த்தகர்களுடனும் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.

இந்தப் பயணத்தின்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், கிளிநொச்சிமாவட்டச்செயலர் றூபவதிகேதீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் அமைச்சர்களின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர். (ச-113)

# நல்லூர்த் தொகுதிக் கிளை புதிய நிர்வாகத்தெரிவு

**யாழ்ப்பாணம், நவ. 4**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக் கிளை பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நல்லூர்த் தொகுதிக் கிளைக் காரியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொண்டார்.

புதிய நிர்வாக சபைத் தெரிவில் தலைவராக சீ.வீ.கே.சிவஞானம், உபதலைவராக பெ.கனகசபாபதி, பொருளாளராக தியாகமூர்த்தி, நிர்வாக சபை உறுப்பினர்களாக வசந்தகுமார், இராசசேகரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் எனவும் உள்முரண்பாடுகளைச் சீர்செய்தல், தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளும், பொதுவிடயங்களில் இணைந்து செயற்படுதல், அரசியல் தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் அபகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியை வலியுறுத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. தமிழரசுக் கட்சியின் இவ்வருடத்துக்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாவது தொகுதிக் கிளைத் தெரிவு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-20)



# ஹற்றன், நுவரெலியா வீதிகளில் பனிமூட்டம்

**கொழும்பு, நவ. 4**

சீரற்ற காலநிலை காரணமாக மலையகப் பகுதிகளின் பிரதான வீதிகளான ஹற்றன், நுவரெலியா மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்துப் பக்க வீதிகளும் பனிமூட்டத்தால் மூடப்பட்டுள்ளன.

அனைத்து வீதிகளும் பனியில் உறைந்து காணப்படுவதால் அந்த வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகளை, வாகனத்தின் முன்பக்க விளக்குகளை ஒளிரச்செய்து மெதுவாக வாகனத்தை இயக்குமாறு ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது பெய்து வரும் மழையால் கனியன், லக்சபான, நியூ லக்சபான, பொல்பிட்டிய மற்றும் விமலசுரேந்திர நீர்மின் நிலையங்களில் மின் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது என்று மின் உற்பத்தி நிலைய பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (ஒ-14-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவில் இருந்து வந்த தடை விலகும். புதிய முயற்சிகள் வேண்டாம். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் அலையவேண்டி வரும்.

**இடபம்:** தொழிலை விருத்தி செய்யும் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மறைமுக இடையூறுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம் :** நேற்றைய எண்ணம் நிறைவேறும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி நன்மையாகும். நினைத்ததை சாதிப்பீர்கள். கையிருப்பு குறையக் கூடும். காரியத் தடைகள் விலகும்.

**கடகம்:** சந்திராஷ்டமம் என்பதால் கவனமுடன் செயற்படுங்கள். தடை ஏற்படும். செயல்களில் முன்னேற்றம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளரால் பிரச்சினைகள் ஏற்படும்.

**சிம்மம்:** உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** எதிர்ப்புகளை இல்லாமல் செய்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். பணியாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவும்.

**துலாம்:** பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும் தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் ஒருவரால் நன்மையுண்டு. தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் இருந்து வந்த தடை நீங்கும். அனைத்து விடயங்களிலும் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** சகோதரர்களுடன் ஏற்பட்ட பிரச்சினை சரியாகும். குடும்பத்தில் செல்வாக்கு உயரும் நாள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை தீரும். வருமானம் அதிகரிக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். இன்று லட்சுமி நரசிம்மரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். உங்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தவர்கள் விலகுவார்கள். முக்கியமான மான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம்.

**மீனம்:** திடீர் செலவால் சங்கடம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். லாபம் எதிர்பார்த்ததை விட கூடுதலாகக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பயந்தவர்களுக்கு எல்லாமே எட்டாக்கனியே!

அரசாங்கத்துக்கு எதிராக, மிகப்பெரும் எடுப்பில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு மக்களை அணி திரட்டி, கடைசியில் வெண்ணெய் திரள்கையில் தாழியை உடைத்ததுபோல சொதப்பியிருக்கின்றன எதிர்க்கட்சிகள். அரசாங்கத்துக்கு எதிரான போராட்ட மனோநிலையை நீர்த்துப்போகச் செய்யும் அல்லது இயலாமை மனோபாவத்தை உருவாக்கும் வகையில் எதிர்க்கட்சிகளின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக கோலோச்சிய காலத்தில் எழுந்து நிற்கக்கூட இடங் கொடாமல் ஐக்கிய தேசியக் கட்சியை பாடாய்ப்படுத்தினார். அந்தளவு தூரத்துக்கு மோசமான நிலைமையில்தான் இப்போது எதிர்க்கட்சிகள் இருக்கின்றன என்பதை நேற்றுமுன்தினம் அவர்கள் நடத்திய போராட்டம் எடுத்துக்காட்டியிருக்கின்றது. மிக மோசமான பாதுகாப்புச் செயலராக இருந்து, போராட்டக்காரர்களை சட்டத்துக்குப் புறம்பாக வெள்ளைவாகனத்தில் கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போதுதான் இந்த நாட்டின் வரலாற்றையே புரட்டிப்போட்ட மக்கள் புரட்சி வெடித்தது.

அந்தப் புரட்சி அரசியல் கட்சிகளால் ஆரம்பிக்கப்பட்டது அல்ல. ஆனாலும், அரசியல் கட்சிகள் அதில் பங்குதாரர்கள் ஆகினர். ராஜபக்ச அரசாங்கத்தை விரட்டுவதற்கான அந்தப் புரட்சி சாதாரணமாக அரங்கேறவில்லை. அதனை முடக்க, முளையிலே கிள்ளி எறிய பலதரப்பட்ட அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றங்கள் ஊடாக தடைகளும் பெறப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக பொலிஸாரால் தடியடி, கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு, தண்ணீர்த்தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டன. அதனையும் உடைத்து முன்னேறியமையால்தான் கோத்தாபய ராஜபக்ச என்ற இரும்பு மனிதனை ஜனாதிபதி கதிரையிலிருந்து வீழ்த்தி, தப்பியோட வைக்க முடிந்தது. அவரது அரசாங்கம் கவிழ்ந்தது. பொலிஸாரின் தடைகளைப் பார்த்து திரும்பிச் சென்றிருந்தால், கோத்தாபய ராஜபக்ச இன்னமும் பதவியிலிருந்திருப்பார். இப்போதுள்ளதை விட நாடு மிக மோசமான நிலையில் இருந்திருக்கும். தடைகளை அன்று உடைத்தமையினாலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

ஆனால், இவற்றில் எந்தவொரு சம்பந்தமுமற்ற எதிர்க்கட்சிகள் இணைந்து மிகப் பெரிய மக்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. அரசாங்கத்துக்கு எதிரான குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான பொருளாதார மீட்சியில்லாத, வரி அதிகரிப்பு, கட்டண அதிகரிப்பு என்பவற்றுக்கு எதிரான மக்களின் கொதிமனநிலை இன்னமும் அடங்கவில்லை. அந்தப்பொறியை பற்ற வைப்பதன் ஊடாகவே அரசாங்கத்தை ஆட்டம் காண வைக்க முடியும். அந்தப் பொறியை தீயாகப் பற்றவைக்கின்றோம் என்றுதான் எதிர்க்கட்சிகளும் அவர்களின் தொழிற்சங்கங்களும் இணைந்து நேற்றுமுன்தினம் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன. மக்களும் பெருமளவு திரண்டார்கள். அரசாங்கத்துக்கு எதிரான மற்றொரு கிளர்ச்சியின் ஆரம்பமாக இந்தப் போராட்டம் அமையும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அதையெல்லாம் போட்டுடைத்து மக்களை ஏமாற்றி நடுத்தெருவில் விட்டிருக்கின்றார்கள் எதிர்க்கட்சியினர். அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் மனநிலை எழுச்சியடைந்து வரும் நிலையில் அதை உரிய வகையில் மடைமாற்றி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு மாறாக பொலிஸார் முன்பாக மண்டியிட்டு புறமுதுகு காட்டி ஓடியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித். போராட்டக்காரர்களே சஜித்தை ஏளனப்படுத்தும் நிலையும் நேற்றுமுன்தினம் உருவாகியிருந்தது. அமைதிப்போராட்டம் என்றால் இங்கு ஆட்சி மாற்றமோ, அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதோ நடக்காது. இங்கு ஆட்சியில் இருப்பவர்கள் ஒன்றும் மேற்கத்தைய தலைவர்கள் அல்ல. மயிலே மயிலே என்றால் இறகுபோடாது. நாம்தான் பிடுங்கி எடுக்கவேண்டும். அதைப்போல ஆட்சியாளர்களுக்கு புரியும் மொழியில்தான் போராட்டங்களை நடத்தவேண்டும். எதிர்க்கட்சியினர் நடத்திய இந்தப் போராட்டத்தின் வெற்றி அரசாங்கத்துக்கே கிடைத்திருக்கின்றது. இவர்களை நம்பி களமிறங்கிய மக்களை ஏமாற்றி விட்டு தலைவர்கள் தப்பியோடியிருக்கின்றார்கள். இதனால் எதிர்காலத்தில் போராட்டங்களின் மீதான மக்களின் நம்பிக்கை பொய்த்துப்போகச் செய்யப்பட்டிருக்கின்றது. மக்களின் மனதில் உள்ள பொறியை தீயாக மாற்றத் தெரியாத இவர்கள் எல்லாம் ஒருபோதும் தலைவர்களாக முடியாது. அதனால் நாட்டை ஆள்வதென்பதும் அவர்களுக்கு எப்போதும் எட்டாக்கனிதான்.


## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்கார முடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பெரியளவில் வளர்ச்சியடையும்."

— கிரேக்கப் பழமொழி






# அரசு சூழ்ச்சிகள் செய்தாலும் உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்!

## ஜி.எல்.பீரிஸ் திட்டவட்டம்



**கொழும்பு, நவ.4**

**உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் எத்தகைய சூழ்ச்சித் திட்டங்களை வகுத்தாலும், அவற்றை தோற்கடிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது விடயத்தில் எதிரணிகள் ஒன்றிணைந்து கூட்டு தாக்குதலை மேற் கொள்ளும்.**

- இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் சபை'யின் முக்கியஸ்தரும், சட்டத்துறை பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2023 மார்ச் 20 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல். நடத்தப்படவேண்டும். அதற்கான பூர்வாங்கப் பணிகள் தற்போது ஆரம்பமாகியிருக்கவேண்டும். எனவே தேர்தலை நடத்துவதற்கான நிதியை அரசாங்கத்திடம், தேர்தல்கள் ஆணைக்குழு கோரவேண்டும். அதிகாரிகளை நியமிக்க வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடும்கூட.

ஆனால் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக தேர்தல் முறைமை பற்றி ஆராய தெரிவுக்குழு அமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம் அல்ல. ஏனெனில் தேர்தல் முறைமை தொடர்பில் ஆராய்வதற்கு தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு பல சந்திப்புகளை நடத்தியது. தற்போது அறிக்கைகூட முன்வைக்கப்பட்டுள்ளது. அக்குழுவால் ஆழமாக ஆராயப்பட்டு முன்வைக்கப்பட்ட அறிக்கை இருக்கையில், மற்றுமொரு தெரிவுக்குழு எதற்கு?

தேர்தலை நடத்துவதற்கான நிதியை தட்டுப்பாடின்றி வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பிரதான கடப்பாடு என உயர்நீதிமன்றம்கூட இதற்கு முன்னர் தீர்ப்பளித்துள்ளது. மக்களின் சர்வஜன வாக்குரிமையின் ஓர் அங்கமே தேர்தல். சர்வஜன வாக்கெடுப்பின்றி அதனைப் பிற்போட முடியாது.

அதேவேளை,உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்திக்கொள்வதற்காக எதிரணிகள் ஒன்றிணைந்து உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளன.

இதற்கிடையில் அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்களில் பிரதான இடத்தை வகிப்பது தேர்தல்கள் ஆணைக்குழுவாகும். அதற்கான உறுப்பினர்கள் அரசமைப்புப் பேரவை ஊடாக நியமிக்கப்படுவார்கள். அரசமைப்புப் பேரவைக்கு மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

புதிய தேர்தல்கள் ஆணைக்குழுவை வைத்து தேர்தலை பிற்போட அரசு சூழ்ச்சி செய்தால் கூட, அவை அனைத்தையும் தோற்கடிக்க எதிரணிகள் நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

(எ-44)

**நாளை**

**05.11.2022**
**சனிக்கிழமை**
**ஐப்பசி 19**

·சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம்: 09.04 - 10.34

**சனிப்பிரதோஷ விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்போர் எண்ணிக்கை 9.1 வீதத்தால் குறைவடைவு

கொழும்பு, நவ. 4

**நாட்டில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 9.1 சதவீதத்தால் குறைந்துள்ளது என புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அதிகாரசபையின் தலைவர் மருத்துவர் சமாதி ராஜபக்ச தெரிவிக்கையில்,எதிர்வரும் காலங்களில் புகைப்பிடிப்பவர்களில் 51 சதவீதமானவர்கள் அதிலிருந்து விலகுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. வர்த்தக நிலையங்களில் சில்லறை விலைக்கு சிகரெட் விற்பனை செய்யப்படுவதே அதிலிருந்து அவர்கள் விடுபடத் தடையாக உள்ளது.

சிகரெட்டின் விலை மேலும் அதிகரிக்கப்பட்டு, அதற்கான விலைச்சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் - என்றார். (ச-இ)

## திருவடிநிலை மயானத்தை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 4

வலி.மேற்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட சுழிபுரம் திருவடி நிலை பொதுமயானத்தை விரைவில் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் மயானத்தின் மேற்கூரைகள் அனைத்தும் கழன்றுள்ளன. இதனால் மயானத்தில் உடலங்களைத் தகனம் செய்வது பெரும் சவாலாக மாறியுள்ளது. எனவே மயானத்தை விரைவாகப் புனரமைத்துத் தருமாறு வலி.மேற்கு பிரதேசசபையினருக்குப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து இது தொடர்பில் வலி.மேற்கு தவிசாளர் நடனேந்திரனைத் தொடர்புகொண்ட போது, நாட்டினுடைய பொருளாதார நெருக்கடி காரணமாக சபை நிதிப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. சங்கானை, சந்தியகாடு போன்ற சந்தை வருமானத்திலே பிரதான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் சோலை வரிகளை விழிப்புணர்வூட்டியே சேகரிக்கின்றோம்.

இந்தநிலையில் பிரதேசவாசிகள், நலன்விரும்பிகள், புலம்பெயர் உறவுகள், பொதுமக்கள் யாராவது சுழிபுரம் மயானத்தை புனரமைக்க நிதிப்பங்களிப்பை வழங்க முன்வருமாறு தெரிவித்தார். (ஒ-14-125)



## இழப்பீட்டுக்கான நடமாடும் சேவை

முல்லைத்தீவு, நவ. 4

இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் துணுக்காய் பழைய பிரதேசசெயலக வளாகத்தில் நடமாடும் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது.

இதன்போது துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பகுதி மக்களுக்குரிய 280 இழப்பீட்டுக் கோரிக்கைக்கான கோவைகள் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலக பிரிவிலிருந்து 4 கிராமஅலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுடைய இழப்பீட்டுக்கான கோரிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இழப்பீட்டுக்கான கொழும்பு அலுவலகத்தின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் இழப்பீட்டு அலுவலர்கள், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள், பிரதேசசெயலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு சேவையை வழங்கினர். (ஒ-14-19)

## தவறான முடிவெடுத்து சிப்பாய் உயிரிழப்பு

முல்லைத்தீவு, நவ. 4

கேப்பாபிலவு பகுதியில் அமைந்துள்ள விமானப்படைத்தளத்தில் கடமையாற்றும் விமானப்படை சிப்பாய் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

விமானப்படைத்தளத்தில் கடமையில் இருந்த விமானப்படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழப்பு தொடர்பில் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மரணவிசாரணை அறிக்கையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14-19)

## அனுமதியின்றி மாடுகளை கடத்தியவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

காரைநகரிலிருந்து அனுமதிப்பத்திரமின்றி 3 மாடுகளைக் கொண்டு சென்ற சந்தேகநபர் ஒருவரை பொன்னாலை சந்தியில் வைத்து கடந்த திங்கட்கிழமை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

மூளாய்ப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார். கடற்படையினர், மீட்கப்பட்ட மாடுகளையும் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தினர். வட்டுக்கோட்டைப் பொலிஸார் சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து மாடுகளை சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற குற்றத்துக்காக நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது. (ச-27)

## வடக்கு - கிழக்கு பல்கலை மாணவர் சிநேகபூர்வ சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 4

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது இரு பல்கலைக்கழக ஒன்றியங்களுக்குமிடையிலான எதிர்காலத் திட்டமிடல்கள், தமிழ்த் தேசியப் பரப்பினுள் மாணவர் ஒன்றியங்கள் ஆற்ற வேண்டிய செயற்றிட்டங்கள் என ஆக்கபூர்வமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (ஒ-14-125)

## தொழிற்பயிற்சி கற்கைகள் விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 4

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையால் 2023ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டுக்கான முழுநேரக் கற்கைநெறிகள் எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி அனைத்துப் பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், கணினி வடிவமைப்பாளர், முச்சக்கரவண்டி திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை என்.வி.கியூ. சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும்.

கற்கவிரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே. கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை 0212227949, 0212211793, 0212057047, 0212262550 மற்றும் 0707161955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மேலும் அறிவித்துள்ளது. (ச)

## சட்டவிரோத செயல்களுக்கு மாநகரசபையால் தண்டம்

யாழ்ப்பாணம், நவ. 4

பொதுஇடங்களிலும் தெரு வீதிகளிலும் குப்பை போடுதல் மற்றும் உணவகங்களிலிருந்து கழிவு நீரை பொது வடிகாலினுள் செலுத்தல், குடியிருப்பாளர்கள் குடியிருப்புக்களுக்கு முன்னுள்ள வீதியோரத்தை தூய்மையாக வைத்திருக்காமை, போக்குவரத்துக்கு இடையூறாக பொருள்களை வீதியோரங்களில் வைத்தல் உட்பட சில செயற்பாடுகளுக்கு யாழ்.மாநகரசபைத் தீர்மானத்தின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளது.

அதன்படி பொதுஇடங்களில் கழிவுகளை இடுதல் 5 ஆயிரம் ரூபா, உணவகங்களிலிருந்து கழிவு நீரைப் பொதுவடிகாலினுள் செலுத்தல் 5 ஆயிரம் ரூபா, வெற்றிலை போட்டு துப்புதல் 2 ஆயிரம் ரூபா, பொது இடங்களில் மலசலம் கழித்தல் 5 ஆயிரம் ரூபா, குடியிருப்பாளர்கள் வீதியோரத்தைத் தூய்மையாக வைத்திருக்காமை 3 ஆயிரம் ரூபா மற்றும் தூய்மைப்படுத்தாத காணிகளை மாநகரசபை முறையான அறிவித்தலின்படி கையகப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபை மேற்கொள்ளவுள்ளது.

குறிப்பிடப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களை சமர்ப்பிப்போருக்கு வெகுமதியாக அறவிடப்படும் நபரின் தண்டப்பணத்தின் 10 வீதம் வழங்கப்படும் என்று யாழ்.மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (ஒ-14)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 4

டேவிட் பீரிஸ் வர்த்தகக் குழுமத்தின் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தின் மூலம் பெண்களை மேம்படுத்தும் நிகழ்ச்சிக்கான விருது வழங்கல், யாழ்ப்பாணம் நோர்த் கேற் ஹொட்டலில் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

- இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020
- மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்திலோ அல்லது *www.codl.jfn.ac.lk* எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 25.11.2022 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**03.11.2022** (CR 38430) (3/6) **பதிவாளர்**

## விலை மனுக்கோரல் (IFB)
### கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்
### திணைக்களப் பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினை பெற்றுக்கொள்ளல் - 2022
### கேள்வி கோரல் இல:- NP/23/1/2/4/V.hir/2022

01. யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு வாடகை அடிப்படையில் வாகனம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரரிடமிருந்து வடமாகாணக் கட்டடங்கள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக்குழுத் தலைவரால் (திணைக்கள பிரதான பெறுகைக்குழு) கோரப்படுகின்றது.
02. வாடகை அடிப்படையில் 2012ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 01ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றினை (Passenger Van with Dual A/C) பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
03. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான (NCB) நடைமுறையின் பிரகாரம் நடத்தப்படும்.
04. ஒப்பந்தத்தினைப் பெறுவதற்கான தகுதியான மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாதவராகவும் ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்கான விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் பகுதி – 2 இல் கேள்வி கோரலுக்கான தரவுத்-தாளில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்கள்த்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விலை மனுக்களை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை பரிசீலித்துப் பார்க்க முடியும்.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 08.11.2022 முதல் 21.11.2022 வரையான காலப்பகுதியில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.500.00இனை காசாக செலுத்தி மாகாணப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுப் பத்திரத்தினைப் மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கடற்கரை வீதி, குருநகர் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
07. கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் 14.11.2022ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு விலைமனுக் கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.
08. மூடிய விலைமனுக்கள் யாவும் 22.11.2022 அன்று பி.ப. 3.00மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு கடற்கரை வீதி, குருநகரில் உள்ள மாகாண கட்டடங்கள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கால தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலை மனுக்கள் அவற்றினை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
09. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா.40,000.00ற்கான 26.02.2023 வரை செல்லுபடியாகும் வகையில் மீளளிப்பு செய்யப்படக்கூடிய வங்கி உத்தரவாத பிணைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**தொலைபேசி இல:-**
**021-2228091**
**திகதி: 04.11.2022**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாணக் கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரை வீதி, குருநகர்.**

(CS 38425) (3/6)

## இஸ்ரேலின் பிரதமராகின்றார் நேதன்யாகு

இஸ்ரேலில் அணமையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், பெஞ்சமின் நேதன்யாகு தலைமையிலான லிகுட் கட்சி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ளது. இதனால், பெஞ்சமின் நேதன்யாகு மீண்டும் பிரதமராகவுள்ளார். (ம)

## யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி
### கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படவுள்ள பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| இல | பயிற்சி விபரம் | பயிற்சிக் காலம் | அடிப்படை கல்வித்தகமை |
|---|---|---|---|
| 01 | கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர – சாதாரண பிரிவு | 06 மாதம் | க.பொ.த. சாதாரணதரம் சித்தி |
| 02 | கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர – உயர்தரம் | 10 மாதம் | க.பொ.த. உயர்தரம் சித்தி |

மேற்படி பயிற்சிக்கான விபரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் சபையின் அலுவலக நேரத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி - 20.11.2022**
**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி - செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,**
**இல 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**T.P : 021 222 2324**

**குறிப்பு :- இப்பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்து சித்தியடைபவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு உண்டு.**

(cr 38428) (2/6)

## VACANCY
### UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under-mentioned post up to **Thursday, 14.11.2022.**

**Post of Temporary Scientific Assistants**
**"Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

**Salary scale:** Rs.48, 385 / - (fixed) pm

**Qualifications:-**

Para-Medical or Science Based Qualified Graduates from the following categories:

I

A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.

II

A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.

III

An ordinary pass in the B.Sc. Special Degree Examination in the relevant field.

IV

An ordinary pass in the B.Sc. General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format. Applications with scanned copies of all the documents should be sent on or before Thursday, 14.11.2022 to the following email address: *fomvacancy@univ.jfn.ac.lk. (Application form is available in the Faculty of Medicine website: https://www.med.jfn.ac.lk/)*

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No):
**970000090000387 in favor of Bursar, University of Jaffna.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview. The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

**Registrar**
**University of Jaffna**

**03.11.2022** (CR 38429) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி (CF) 2022

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு. பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **முதல்வர்/ ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து **04.11.2022 திகதியில் இருந்து 17.11.2022 ஆம் திகதி** வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2.000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) தலைவர். பிராந்தியப் பெறுகைகள் குழு. மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 18.11.2022 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் ஆகும். .
08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 11.11.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பாதுகாப்புப் பிணைத்தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/CF/Package I/ 19 | Improvement of Aasaariyar road (Navaladi) first by lane<br>Construction of Pathirakali opposite second by lane<br>Construction of lotus road by lane second by lane<br>Construction of lotus road by lane first by lane<br>Construction of Thillaivayal road third by lane first lane<br>Construction of Drainage canal of clock tower road<br>Construction of Draiange at B A Thampy Lane - Stage 2 | 3.252 | CF | 2 | C8 & C7 | 33,000.00 | 17.02.2023 |
| 2 | JMC/WD/CF/Package II/ 20 | Renovation of Sinnakinattady left side 1st Lane<br>Renovation of Kachcheri East lane 2nd by lane<br>Renovation of Mampalam junction 3rd by lane (Balance)<br>Renovation of Kandy road by lane (balance)<br>Improvement of Pointpedro Road 2nd by lane<br>Renovation of St. Mary's 1st lane 2nd by lane<br>Renovation of Annai Velankanni Veethy | 3.284 | CF | 2 | C8 & C7 | 33,000.00 | 17.02.2023 |
| 3 | JMC/WD/CF/Package III/21 | Construction of bridge over canal at junction of Koiyathoddam New road & Palkulam 1st Lane<br>Renovation of Mathews road 3rd lane 2nd by lane<br>Extend the existing bridge at Mathews road by lane and Rajasinham road junction<br>Renovation of canal at Patrick's road (Infront of Patrick's college)<br>Paving block work infront of St. James' Maha Vid<br>Renovation of Barathy study centre -Thirunagar | 3.280 | CF | 2 | C8 & C7 | 33,000.00 | 17.02.2023 |
| 4 | JMC/WD/CF/Package IV/22 | Construction of St. Mary's road 1st by lane concrete road works<br>Reconstruction of St. Mary's road Drainage work, Navanthurai North<br>Construction of Drainage canal of Navalar road, Navanthurai<br>Improvement of Oddumadam Vannankulam lane<br>Improvement of (jinna road ) Kaleema road 3rd by lane<br>Construction of Nedunkulam lane road work<br>Reconstruction of Mavadi road crossing drainage aqueduct work, Navanthurai | 3.708 | CF | 2 | C8 & C7 | 38,000.00 | 17.02.2023 |
| 5 | JMC/WD/CF/Package V/23 | Reconstruction of Sirambiyadi Road cannal<br>Improvement of Gopal lane<br>Improvement of C Ponnampalam road 3rd lane road | 2.268 | CF | 2 | C8 & C7 | 23,000.00 | 17.02.2023 |
| 6 | JMC/WD/CF/Package VI /24 | Construction of Adkaaddy Veethy sub lane<br>Construction of Nedunkulam lsub lane<br>Constrcution of Nadutheru Veethy<br>Construction of Kalaivany veethy sub lane<br>Construction of Arulampalam Veethy (Balance work)<br>Renovation of Chetty Street cross road (Balance work)<br>Construction of Box culvert across the temple road and side drain (near sangilian Veethy)<br>Renovation of Aaseervathappar Veethy | 4.240 | CF | 2 | C8 & C7 | 43,000.00 | 17.02.2023 |
| 7 | JMC/WD/CF/Package VII /25 | Renovation of drainage canal in Sinnakkadai east road beach road junction<br>Renovation of 3rd cross streetcanal near the Banshallstreet in small bazar<br>Improvement of Interconnecting road of Beach road to Reclamation Road (Raal vaadi road) | 2.165 | CF | 2 | C8 & C7 | 22,000.00 | 17.02.2023 |
| 8 | JMC/WD/CF/ Package VIII /26 | Renovation of Rakka housing scheme road<br>Renovation of Chundikuli School Opposite 1st lane<br>Renovation of Bankshall street by lnae | 2.088 | CF | 2 | C8 & C7 | 21,000.00 | 17.02.2023 |

தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,மாநகர சபை, யாழ்ப்பாணம்.

04.11.2022





தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, கடந்த மாதம் 6ஆம் திகதி கொக்குவில் பொதுநூலகத்தில் நூல் கண்காட்சியொன்று இடம்பெற்றது. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்டனர். (ம)

# பாலியல் குற்றச்சாட்டு நாமல் குமார கைது!

கொழும்பு, நவ. 4

பெண் ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஊழல் எதிர்ப்பு முன்னணியின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாமல் குமார பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வரக்காபொல பொலிஸ் நிலையத்தில் பெண்ணொருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாமல்குமார தனது வீட்டில் வைத்து தன்னைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார் எனவும் அதன்காரணமாக அவரை வீட்டிலிருந்து இழுத்து வந்து மேலும் நால்வருடன் சேர்ந்து தாக்கினோம் என அந்தப் பெண் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான பெண் உட்பட ஐவரையும் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியதையடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(ச-இ)


நாகபூசணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

0771387596,0719999306

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நீண்ட காலமாக பணிபுரிந்த எமது சகோதரன்

**செல்வப்பிரகாசம் விக்கினேஸ்வரன்**

கடந்த 01.11.2022 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார் அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
சிவானந்தன் (தம்பி)
ஓய்வுநிலை உத்தியோகத்தர் இ.போ.ச
கனேஸ்வரன் (தம்பி - கனடா)

(CS 21497) (3/6)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **செல்வி செ. தர்சிகா** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் வேலன் செல்லத்துரை**

அவர்கள் கடந்த 02.11.2022 ஆம் திகதி புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CR 38431) (3/6)

நலன்புரிக்கழகம்,
மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்களைத் தவிர்க்க வீதியை உடன் சீரமைக்குக

## வீதியை மறித்து மக்கள் கவனவீர்ப்பு

**மன்னார், நவ. 4**

**மன்னாரிலிலுள்ள எழுத்தூர் சந்தியிலிருந்து தரவன்கோட்டை வரையான பிரதான வீதியை உடன் சீரமைத்துத் தருமாறு கோரி அப்பகுதி மக்கள் வீதியை மறித்து நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

மன்னாரின் பிரதான கிராமங்கள் பலவற்றை உள்ளடக்கி மன்னார் நகரசபையின் பராமரிப்பின் கீழுள்ள எழுத்தூர் சந்தியிலிருந்து தரவன்கோட்டை வரையான பிரதான வீதியானது பயணிக்க முடியாத அளவில் மிக மோசமாக சேதமடைந்துள்ளது. இதனூடாக பயணிப்போர் விபத்துகளுக்கு உள்ளாகும் அபாய நிலை காணப்படுகிறது.

2000 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்த வீதி பின்னர் புனரமைப்புச் செய்யப்படாது குண்டும் குழியுமாக மாறியுள்ளது.

தோட்டக்காடு சாந்திபுரம், தரவன்கோட்டை, கீரி மற்றும் ஜீவன்புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் ஒரே பாதையாக இந்த வீதி காணப்படுகிறது.


இந்த வீதி ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

முதியோர், நோயாளிகள், எனப் பலரும் இவ்வீதியூடாகப் பயணிப்பதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு இந்த



வீதியை உரிய அதிகாரிகள் உடன் புனரமைப்புச் செய்துதரவேண்டும் - என்றனர். (ச-60)



அரியாலை, முல்லைத்தீவு குள

## தடுப்பணை, அணைக்கட்டு புனரமைப்புப்பணி நிறைவு


யாழ்ப்பாணம், நவ. 4

அரியாலை தடுப்பணை, முல்லைத்தீவு மருதங்குளத்தின் அணைக்கட்டு ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண நீர்ப்பாசனத்திணைக்ளம் மற்றும் இராணுவத்தின் பொறியியல் களப் படையணியுடன் வடக்கில் நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டன.

சுமார் 13.5 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் அரியாலை தண்ணீர் தடுப்பணையின் கீழ் தளப் பணிகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு மருதங்குளத்தின் அணைக்கட்டுப் பகுதியும் சீர் செய்யப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மொத்த திட்டச் செலவில் 50 வீதம் ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது. தற்போது மழைக்காலம் ஆரம்பித்த நிலையில் ஏனைய அபிவிருத்திப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. உரிய காலத்தில் மீண்டும் தொடர்ச்சியாகத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் - என்றார். (ஒ-14-20)



## வல்லபாய் படேலின் பிறந்தநாள் நிகழ்வு

இந்தியாவின் இரும்பு மனிதர் எனப் போற்றப்படும் முதலாவது துணைப் பிரதமரும் வழக்கறிஞருமான சர்தார் வல்லபாய் படேலின் 147 ஆவது பிறந்தநாள் நிகழ்வு, யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 147 ஆண்டு காலத்துக்கு முற்பட்ட சர்தார் வல்லபாய் படேல் ஆட்சிக்காலத்தில் காணப்பட்ட விடயங்கள் கண்காட்சி மூலம் காட்சிப்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பான விளக்கமும் அளிக்கப்பட்டது.

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ், யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சிவலிங்கராசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14-27)

## சாவ.நகர சபை 2023 பாதீட்டில் மக்களின் திட்டங்கள் உள்ளீர்ப்பு

சாவகச்சேரி, நவ. 4

சாவகச்சேரி நகரசபையின் 2023ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீட்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அந்தந்த வட்டார மக்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான உத்தேச பாதீட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் சபையின் வரியிறுப்பாளர்களின் முன்மொழிவுகள் பெறப்படவுள்ளன.

இதற்கான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நகரசபையின் பொன் விழா மண்டபத்தில் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதுவரை காலமும் உத்தேச பாதீடு தயாரிக்கையில் தலா 15 லட்சம் ரூபாவுக்கு உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றுக்கு ஒதுக்கப்படும்.

இந்தவருடம் தவிசாளரின் முன்மாதிரியான செயற்பாடாக 2023ஆம் ஆண்டு உத்தேச பாதீடு தயாரிக்கும்போது ஒவ்வொரு வட்டாரத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் அந்தந்த வட்டார மக்களால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ச-9)

## புத்தூர் நூலகத்தின் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், நவ. 4

வலி.கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொதுநூலகத்தால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படும் புத்தகக் கண்காட்சி இன்று 4ஆம் திகதி முதல் எதிர்வரும் 6ஆம் திகதிவரை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அறிவித்துள்ளார். (ச)

## குளவி தாக்கி ஐவர் பாதிப்பு!

சாவகச்சேரி, நவ. 4

கொடிகாமம் கொயிலாமனைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கருங்குளவிகள் தாக்கியதில் ஐவர் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் கூட்டிலிருந்து கலைந்த குளவிகள், காலையில் மூவரையும் மாலையில் இருவரையும் தாக்கியுள்ளன.

குளவிகளின் தாக்குதலுக்கு இலக்கான 5 நபர்களும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-14-9)

# இஸ்லாம் பாடப்புத்தகங்கள் மீள விநியோகிக்கப்பட்டன

கொழும்பு, நவ.4

திருத்தம் மேற்கொள்வதற்காக மீளப்பெறப்பட்ட இஸ்லாம் பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பணிப்புரை விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப் புத்தகத்தினை மீள் விநியோகம் செய்தல் தொடர்பில் கல்வி அமைச்சர் பிரேமஜயந்தவின் தலைமையில் உயர்மட்ட கலந்துரையாடல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்களின் நலன்கருதி இஸ்லாம் பாடப் புத்தகங்களை உடன் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பாடப்புத்தகத்தில் எதிர்காலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளுமிடத்து திருத்தக் குழுவில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை உறுப்பினர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என றிஷாட் பதியுதீன் கோரிக்கை விடுத்தார்.

மேலும், நீதிக்கான .மையத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஹ்பி எச். இஸ்மாயில், மீளப்பெறப்பட்ட இஸ்லாம் பாடப் புத்தகங்கள் மீளப்பெறப்பட்டு 10 மாதங்கள் கடந்தும் திருத்தப்பட்ட புத்தகங்கள் இன்றுவரை வழங்கப்படவில்லை.

இதனால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து இன்றிலிருந்து இரு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட இஸ்லாம் பாடப்புத்தகங்களை நாடு பூராகவும் விநியோகிக்க வடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்தார். அதற்கமைய இஸ்லாம் பாடப்புத்தகங்கள் நீதிக்கான .மையத்தின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன. (ச-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சிவச்சந்திரராசா தங்கபூபதி**

பிறப்பு 18.04.1955
இறப்பு 05.10.2022

திதி:பூர்வபக்க ஏகாதசி

இவ்வுலகிலிருந்து விண்ணுலகம் சென்று 31 நாளாகிவிட்டதே! உன் பாசமும் நேசமும் எங்களின் நெஞ்சில் பதிந்து அசையாத ஆணி வேராக ஊன்றியுள்ளதே! என்றும் புன்னகையுடன் இன்முகம் காட்டி எல்லா உள்ளங்களிலும் குடி கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.11.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## பகவதி பரமநாதன்

தோற்றம் 27.12.1937
மறைவு 03.11.2022

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பகவதி பரமநாதன் அவர்கள் நேற்று (03.11.2022) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரமநாதன் அவரிகளின் பாசமிகு மனைவியும், சிவோத்தமன் அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சந்தானராஜாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
பெறாமகன் - ப.சிவோத்தமன்

# மண்ணில் மலர்ந்து நூறாண்டு விண்ணில் நிறைந்து ஏழாண்டு



மண்ணில் 04.11.1922
விண்ணில் 10.05.2015

## அமரர் நாகலிங்கம் ஞானசம்பந்தன் (சம்பந்தர்)

(ஓய்வுபெற்ற காணி பதிவாளர், முன்னாள் வலிகாமம் மேற்கு பிறப்பு, விவாகம், இறப்பு பதிவாளர், சமாதான நீதவான்.)

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
புன்னகை பூத்தமுகம், பரந்த உள்ளம்
சிறிய உருவம், அமைதியான அணுகுமுறை
அன்பான பேச்சு, ஆளுமை கொண்ட செயல்
அகமும் வெள்ளை, புறமும் வெள்ளை
நற்பணி ஆற்றும் திறன், நல்வழி காட்டும் மனம்
தலைமைத்துவம், தன்னம்பிக்கை
தளராத நெஞ்சுறுதி, தவறாத வாக்குறுதி
கடமை உணர்வு, கண்ணியமான வாழ்வு
உறவுக்கு பாலம், உரிமையான அரவணைப்பு
அனைத்தும் நாம் இவரிடம் கற்ற பாடங்கள்

மண்மறவா மைந்தன்
மண்ணில் மலர்ந்து நூறாண்டு
விண்ணில் நிறைந்து ஏழாண்டு
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த - நீவீர்
என்றும் எம் மனதில் தெய்வமாய்.

சுதுமலை தெற்கு
மானிப்பாய்.

(CS 21480) (3/6)

நீங்கா நினைவுகளுடன்
திருமதி பவானி சிறீதரன் (மகள்)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைக்கு தீர்வை எட்டுக

### ஜனாதிபதி செயலாளர் பணிப்பு


கொழும்பு, நவ. 4

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து ஆராய புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினை, ஓய்வூதியம், பதவி உயர்வு நடைமுறைகள், நிரந்தர நியமனம் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பான பல யோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உடனடி கவனம் செலுத்தி அவற்றைத் தீர்க்க துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். (ச-இ)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 . 04 . 1946
உதிர்வு 24 . 12 . 2021

அமரர்
**சண்முகம் அமரசிங்கம் (சிங்கம்)**

(D8, இல.30, உருத்திரபுரம், கிளிநொச்சி.)

உழைப்பால் உயர்ந்தவரே!
ஊர்போற்ற வாழ்ந்தவரே!
அன்புகாட்டி ஆதரவு தந்தவரே!
பண்பில் நின்று பாசமழை பொழிந்தவரே!
எங்கள் இதயம் துடிக்கிறது!
இனி என்று காண்போம் உன் இன்முகத்தை....

துயர்பகிரும்-
மனைவி கமலலோஜினி (லைலா)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 08 . 1929
மறைவு 02 . 11 . 2022

## திருமதி சரஸ்வதி வயித்திலிங்கம்

தெல்லிப்பளை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வயித்திலிங்கம் அவர்கள் கடந்த (02.11.2022) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வன்னித்தம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வயித்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவசேனா, கெங்காதேவி (முன்னாள் இலங்கை வங்கி அலுவலர்), மற்றும் பாலச்சந்திரன் (கொழும்பு), சாவித்திரிதேவி (ஓய்வுபெற்ற கமநல சேவை உத்தியோகத்தர்), பிறேமாதேவி (U.K), பானுமதி (பிரதேச செயலகம், காரைநகர்), குமரன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஶ்ரீபாலச்சந்திரன், காலஞ்சென்ற நடேசன் மற்றும் ரோகிணி, குகனேசன், ராயூ, இரவீந்திரன், லகுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், றோகன், அருணன், உதயசேகர், உதயகுமார், சஜித்குமார், சஞ்சயன், சரண்யன், சிந்துஜெயந்தி, வைஷ்ணவி, கார்த்திகாயினி, கிருத்திகாயினி, நர்மிகா, யாழினி, கிருசாந்தி, மயூரதி, சிவகாமி, காலஞ்சென்ற வேலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தார்மிகன், சகானா, மிகுனன், ஜினோஸ், பார்வின், விருண் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு:
0777 2962 16, 0777 448 481

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21605) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாணத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சந்திப்பு!

யாழ்ப்பாணம், நவ. 4

வடக்கு மாகாணத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எரிபொருள் விநியோகம் தொடர்பான விடயங்களில் வெளிநாட்டு நிறுவனங்களை அரசு நாடுகின்றமை, அரசாங்கத்தால்எரிபொருள்விநியோகஸ்தர்களுக்கு வரும் இலாபம் குறைக்கப்பட்டுள்ளமை மற்றும் வடமாகாண மக்களின் வாழ்வாதார எரிபொருள் விநியோகத்தை சீராக்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கொழும்பில் உள்ள தாய்ச் சங்கத்தைச் சேர்ந்த முக்கியமான பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

### புலிகள்...

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் ஒருவர் முன்வைத்த மேன்முறையீடு, தவலறியும் ஆணைக் குழுவில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2019ஆம் ஆண்டு குறித்த ஊடவியலாளர் சரணடைந்த விடுதலைப்புலிகள் தொடர்பில் தகவலறியும் உரிமைச்சட்டம் மூலம் விண்ணப்பித்தபோது, 'எங்களிடம் புலிகள் சரணடையவில்லை' என அந்த விண்ணப்பத்தை இராணுவம் மறுத்திருந்தது. இது தொடர்பான மேன்முறையீடே மூன்று வருடங்களுக்குப் பின்னர் நேற்றுப் பரிசீலிக்கப்பட்டது. இதன்போதே இலங்கை இராணுவம் இவ்வாறு சாட்சியம் வழங்கியது.

'போர் இடம்பெற்ற பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தார்கள். அவர்கள் புலிகளா? பொதுமக்களா? என்பது எமக்குத் தெரியாது. நாம் பொறுப்பேற்றுக் கொண்டபோது பதிவுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. எம்மிடம் வந்தவர்களை பேருந்துகளில் ஏற்றி மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைத்தோம். அதன்பின்னர் மறுவாழ்வுப் பணியகமே அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டது' என்று இராணுவம் சாட்சியம் வழங்கியது.

ஆனால், ஊடகவியலாளர் சார்பாக ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணி ஸ்வஸ்திக்கா, இராணுவத்தினரின் குற்றச்சாட்டுக்களை மறுத்ததோடு இராணுவத்திடம் புலிகள் சரணடைந்தமைக்கான ஆதாரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தார். மேலும், மறுவாழ்வுப் பணியகத்திடம் இராணுவத்தினர் கூறும் தகவல்கள் இல்லை என்று, மறுவாழ்வுப் பணியகம் வழங்கியுள்ள தகவல்களையும் சட்டத்தரணி ஸ்வஸ்திக்கா ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட்டினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட ஆணைக்குழு, 'அரசாங்கமே இந்த விடயங்களை சர்வதேச அமைப்புக்களுக்கு பல முறை வழங்கி இருக்கிறது. எனவே, 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இப்போது மறைப்பதற்கு ஒன்றுமில்லை' என இராணுவத்துக்கு அறிவுறுத்தியது.

புலிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தமைக்கான எழுத்துமூல சமர்ப்பணங்களை 10 நாள்களுக்குள் இராணுவத்துக்கு ஊடகவியலாளர் வழங்க வேண்டும். அதுபோல இராணுவமும் எழுத்துமூல சமர்ப்பணங்களை விண்ணப்பதாரருக்கு வழங்கவும் ஆணைக்குழு உத்தரவிட்டது. ஜனவரி 4ஆம் திகதி மனு மீள ஆணைக்குழு முன்பாக விசாரிக்கப்படவுள்ளது. (அ-ம)

### காணாமலாக்கப்பட்டோர்...

குறைவு. அதனால்தான் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் துயரங்களை உணர்வுகளை நாம் புரிந்துகொள்கின்றோம். அவர்களை நாம் மதிக்கின்றோம். உறவுகளைத் தொலைத்த துயரத்திலும் அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற ஏக்கத்துடனும் வாழும் குடும்பங்கள் நீதி கேட்டு அரசுக்கு எதிராகப் போராடுவதில் நியாயம் இருக்கின்றது. ஆனால், அவர்களை வைத்து தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமது சுயலாப அரசியலை மேற்கொள்கின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயம். காணாமலாக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்குச் சாத்தியம் மிகவும் குறைவு. இதை அவர்களின் குடும்பத்தினரிடம் கூறினால் அவர்கள் ஏற்கத் தயாரில்லை. நாம் என்ன செய்வது? இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டுதான் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது' - என்றார். (அ-ம-22)

### தமிழர்களுக்கான...

பட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் சங்கமிக்கவேண்டும் - இவ்வாறு வலியுறுத்தினார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ராஜபக்ச அரசு வேறு. ரணில் அரசு வேறு. தற்போது ஆட்சியில் இருப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு. இந்த ஜனாதிபதியும் சரி, இந்த அரசாங்கத்தில் உள்ளவர்களும் சரி தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வுகாணத் தயாராகவுள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் இந்த அரசுடன் நெருங்கிச் செயற்படுகின்றனர். இன்னொரு பகுதியினர் இந்த அரசின் மீது நம்பிக்கை வைக்கத் தயங்குகின்றனர். மற்றொரு பகுதியினர் தங்களுக்கிடையிலான கட்சி ரீதியிலான மோதலால் ஒதுங்கி நிற்கின்றனர். பிளவுபட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓரணியில் இணைந்தால்தான் அரசுடன் திறந்த மனதுடன் பேசி தீர்வுகாண முடியும்' - என்றார். (அ-ம-22)

### டெங்குத்...

யாழ்ப்பாணம் - அல்வாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளார். அன்னலிங்கம் அருந்தவச்செல்வி (வயது- 63) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி குறித்த பெண் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். இதையடுத்து அவர் கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக 2ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### எரிபொருள்...

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விலைக் குறைப்பை எதிர்பார்த்து விநியோகஸ்தர்கள் எரிபொருளுக்கான முன்பதிவுகளை வழங்காததால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகியன தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான அளவு இருப்புக்களைக் கொண்டுள்ளன. எனவே, விநியோகஸ்தர்கள் தங்கள் தேவைகளுக்கு முன்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் - என்றார். (அ-ம)

### இலங்கை...

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் 'இலங்கையை மீளக்கட்டியெழுப்பல்' என்ற வாசகத்துடன் நிதி சேகரிப்புத் தளமொன்றை ஆரம்பித்திருக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டம், அந்தத் தளத்துக்கு தம்மால் இயன்ற நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கை மக்களுக்கு உதவ முன்வருமாறு உலக மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இதுகுறித்துத் தெளிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்து சமுத்திரத்தின் முத்தாக அறியப்படும் இலங்கை இப்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. கடந்த 1948ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகப் பெரிய நெருக்கடி இதுவாகும்.

இதன்விளைவாக பல மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், மொத்த சனத்தொகையில் சுமார் 5.7 மில்லியன் மக்கள் உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்ற துரதிர்ஷ்டவசமான நிலையில் இருக்கின்றனர். அதுமாத்திரமன்றி சுமார் 6.3 மில்லியன் மக்கள் அவர்களின் அடுத்தவேளை உணவு எங்கிருந்து கிடைக்கப்பெறும் என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

எனவே இந்த நிலைவரம் தொடர்ச்சியாக மோசமடைந்துவரும் பின்னணியில், நாம் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான ஏனைய முயற்சிகளில் ஒன்றாக நிதி சேகரிப்பு பரப்புரையொன்றை ஆரம்பித்திருக்கின்றோம். இதனூடாக தற்போது இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

உணவு மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டும் இப்பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இரு துறைகளாகக் காணப்படுகின்றன. நிரம்பல் சங்கிலி சீர்குலைந்திருப்பதுடன் குறிப்பிட்ட சில அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அதன்விளைவாக நாடளாவிய ரீதியில் வழமையான சில அறுவைசிகிச்சைகளைத் தாமதப்படுத்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இவை மக்களை வெகுவாகப் பாதித்திருக்கும் பின்னணியில், இலங்கையைமீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகள் அவசியமாகின்றன. அதன்படி இலங்கையர்களுக்கு உதவுவதற்கு எமக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகின்றது.

இலங்கையில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய தரப்பினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதில் நீங்களும் பங்களிப்புச்செய்யமுடியும். அதன்படி 'இலங்கையை மீளக்கட்டியெழுப்பல்' என்ற மகுடத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதி சேகரிப்புத் தளத்துக்கு உங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கலாம்.

வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு அவசியமான உதவிகளை உலகின் பலதரப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களிடமிருந்து திரட்டிக்கொள்ளும் நோக்கிலேயே இந்த நிதி சேகரிப்புத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனூடாகத் திரட்டப்படும் நிதியானது இலங்கையில் தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகளுக்கு அவசியமான விதைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், குடும்பங்களிடையே வீட்டுத்தோட்ட செயன்முறையை ஊக்குவிப்பதற்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் - என்றுள்ளது. (அ-ம)

## மரண அறிவித்தல்

### திரு.துரையப்பா தர்மசீலன்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் அளவெட்டி – மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)



மேலயப்புலம் அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் மருதனார்மடம் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.துரையப்பா தர்மசீலன் அவர்கள் நேற்று (03.11.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற சாரதாதேவி அவர்களின் அன்புக் கணவரும் கணேஸ்வரன் (கடற்தொழில் பரிசோதகர்) அவர்களின் அன்புத் தந்தையும் நிரஞ்சலா (தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமனாரும் சுபத்திராதேவி காலஞ்சென்றவர்களான சதானந்தன் (லண்டன்). சுசிலாதேவி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜசிங்கம். ஜெயபூபதி. கிறிஸ்டி செல்வராஜா ஆகியோரின் மைத்துனரும் நயனிதா. ஆருத்திரன். ஷாரதா. ஹரதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2022) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0772278931 தகவல்: மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகரக்கொட்டகை இல்லாமையால் மீன்வெட்டுநர்கள் அவலம்



யாழ்ப்பாணம், நவ.4

நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தையில் மழையில் நனைந்தவாறே மீன்வெட்டும் தொழிலில் ஈடுபடும் அவலநிலை ஏற்பட்டுள்ளது என மீன் வெட்டும் தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா பொதுச்சந்தையில் நிரந்தர கூடாரம் இல்லாததால் பத்துக்கும் மேற்பட்ட மீன் வெட்டும் தொழிலாளர்கள் மழையில் நனைந்தவாறே தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்த அவலநிலை குறித்து கடந்த வருடத்திலிருந்து யாழ்.மாநகர சபை அதிகாரிகளுக்கு தெரிவித்தபோதும் அவர்களால் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

நாம் மாநகரசபைக்கு இடவரி செலுத்தி வருகின்றோம். மீன் வெட்டுதல் தொழிலில் ஈடுபடும் எம்மை யாழ்.மாநகர சபையினர் கவனத்திற்கொள்ளவில்லை.

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, எமக்கு நிரந்தர தகரக் கூடாரத்தை அமைத்து எமது அவலநிலைக்குத் தீர்வு வழங்க யாழ். மாநகர அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (சு-27)

### உள்ளக...

உயிரிழக்கின்றனர் என மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் துசித சுகதபால தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தால் கண்டியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலித்தீன் எரித்தல், வீட்டுக்குள் ஊதுபத்திகளை ஏற்றுதல், நுளம்புச் சுருள்களை பற்றவைத்தல் போன்ற செயற்பாடுகள் வீட்டின் உட்புறத்திலும் வெளியிலும் வளிமாசை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக 100 சிகரெட்டைப் பற்றவைப்பதன் மூலம் வெளிவரும் புகையில் உள்ள நச்சுத்தன்மையை விட ஒரு நுளம்புச் சுருளில் இருந்து வெளிவரும் புகையில் நச்சுப் பொருளின் அளவு அதிகம் - என்றார். (அ-ம)

### இம்ரான்கான்...

தானின் வசிராபாத் நகரில், முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுப் பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணியின்போது திறந்த வாகனத்தில் இம்ரான் கான் பயணம் மேற்கொண்டார். இதன்போது அவரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இம்ரான் கான் காலில் காயமடைந்தார். துப்பாக்கிச் சூட்டை அடுத்து இம்ரான் கான் மெய்ப்பாதுகாவலர்களால் பாதுகாப்பாகக் குண்டு துளைக்காத வாகனத்தில் ஏற்றப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் கடும் பதற்ற நிலைமை ஏற்பட்டது. அதிரடிப் படையினர், இராணுவத்தினர், பொலிஸார் என்று பலரும் பாதுகாப்புக்குக் குவிக்கப்பட்டுள்ளனர். இம்ரான் கான் சேர்க்கப்பட்டுள்ள மருத்துவமனையிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம)

### சங்கானைப்...

தக்கதாக பின்கதவு வழியாக நுழைந்த திருடர்கள் 80 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அரைப்பவுண் நகை என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

சேர்வீதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)

### மீற்றர்...

விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### கோதுமை...

இதன்படி, ஒரு கிலோ கோதுமை மா 96 ரூபாவினாலும், ரின் மீன் (உள்ளூர்) 105 ரூபாவினாலும், நெத்தலி 200 ரூபாவினாலும், பருப்பு கிலோ 17 ரூபாவினாலும், வெள்ளைச் சீனி 22 ரூபாவினாலும் விலைக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

விலை மாற்றங்களின் அடிப்படையில் ஒரு கிலோ கோதுமை மாவின் புதிய விலை 279 ரூபாவாகவும், ரின் மீனின் (உள்ளூர்) விலை 585 ரூபாவாகவும், ஒரு கிலோ நெத்தலி ஆயிரத்து 300 ரூபாவாகவும், ஒரு கிலோ பருப்பு 398 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 238 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ-ம)

### ஹெரோய்னுடன்...

கைதான இருவரும் 22 வயதுடையவர்கள். சந்தேகநபர்களிடம் இருந்து 40 மற்றும் 42 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவின் தெ.மேனன் தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)


அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்னும் மூன்று நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உறவினர் இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

## வேலையாட்கள் தேவை
களஞ்சியக்காப்பாளர், அரைக்கும் ஆலை அனுபவமுள்ள (ஆண், பெண்) இருபாலாரும் தேவை.
மாப்பிள்ளை மில் சுதுமலை 0777722215

## கார், வான் வாடகைக்கு
கார்கள் / வான்கள் வாடகைக்கு விடப்படும்.
RSP Rent a Car
0778989691

## வேலை வாய்ப்பு
பல்பொருள் விற்பனை அங்காடி ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை. வலி மேற்கு பிரதேசத்தை சேர்ந்த கணினி அறிவுடைய பெண்கள் விரும்பத்தக்கது.
(CS 21491) (3/6)
தொடர்பு : 072 277 0726

## ரக்டர் விற்பனைக்கு
பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத இங்கிலாந்து தயாரிப்பான EURO Trac 240 4.wd புத்தம் புதிய ரக்டர் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
(CS 21492) (3/6)
தொடர்பு : 077 747 4111


## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு.
- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்:-
- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.
தொடர்பு:- ஜெயம்
077 814 7389
077 986 5457


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 . 11 . 1963



மறைவு
16 . 10 . 2021

காரைநகர் அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும், தச்சன் தோப்பு கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கனகரத்தினம் பத்மநாதன்

ஆண்டு ஒன்றானாலும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் - உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளிவீசி பிரகாசித்தீர்!
இன்று வேண்டித்துதித்தே இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால்துயருறும்
மனைவி ராசலட்சுமி (ராணி)
பிள்ளைகள், மருமகன், மருமகள், மாமா, மாமி,
மச்சான், மச்சாள், அக்காக்கள், அத்தான், மருமக்கள்.

(cs.47417) (2.6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.